கருப்பு ஆட்டுக்குட்டி





கருப்பு ஆட்டுக்குட்டி

கோல்டன் மெக்டொனால்ட்

தமிழில் கிருஷ்ணன்



மெல்ல சுகமாய் தீண்டு ஓ தென்றலே!
காட்டு விலங்குகளிலிருந்து தூரமாய்
என் குட்டி ஆட்டின் மேல் மிருதுவாகும்
மெல்ல சுகமாய் தீண்டு.


மெல்ல சுகமாய் தீண்டு ஓ தென்றலே!
புல்வெளியின் மீதும்
பூக்களின் மீதும்
மெல்ல சுகமாய் தீண்டு.

மெல்ல சுகமாய் தீண்டு ஓ தென்றலே!
நீல வானத்தின் மீதும்
வெள்ளை பனியின் மீதும்
என் கருப்பு குட்டி ஆட்டின் மீதும்
மெல்ல சுகமாய் தீண்டு.

மலையின் மேல் புல்வெளியில்
படுத்து கொண்டு ஆடு மேய்க்கும்
சிறுவன் ஒருவன் அழகான பாடல்
ஒன்றை பாடி கொண்டிருந்தான்.



அவனது வெள்ளை ஆடுகள் மந்தையாக கீழே இருந்த புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தன. எல்லா மந்தை கூட்டங்களிலும் ஒரு கருப்பு ஆடு எப்போதும் இருக்கும். இந்த வெள்ளை ஆடுகளுக்கு நடுவில் ஒரு குட்டி கருப்பு ஆடு மட்டும் அழகாக தத்தி தத்தி கொண்டு நடந்து கொண்டிருந்தது.




அம்மா ஆடுகள் புல்லை மேய்ந்து கொண்டே அதன் குட்டி ஆடுகளை அவ்வப்போது மே..மே..மே.. என்று அழைத்து கொண்டிருந்தது. அந்த வித்தியாசமான ஒலியை கேட்டு கொண்டிருந்த சிறுவனுக்கு ஏதோ வேடிக்கையாக இருக்கவே அதை நினைத்து சிரித்துக்கொண்டிருந்தான்.

பனி மலை உருக உருக புற்கள் எல்லா இடத்திலும் தோன்ற ஆரம்பித்தது. அப்புற்கள் மெதுவாக மலையின் உச்சியை நோக்கி சென்று கொண்டிருந்தது.


புல்வெளி நீண்டு கொண்டே போக போக அச்சிறுவன் ஆடுகளை மேய விடுவதற்கு மலையின் மேல் ஏற்றி கொண்டே சென்றான்.

அந்த நாள் காற்று நிறைந்த தினமாக இருந்தது, வெயிலும் இருந்தது. புற்களின் வாசமும், ஆங்காங்கே பூத்திருந்த பூக்களின் வாசமும் மலை முழுவதும் நிறைந்திருந்தது.



இந்த வெயில் நிறைந்த புல்வெளியில் ஆடுகளை மேயவிட்டு அவைகள் மந்தையை விட்டு தொலைந்து போகாமல் கண்காணித்து கொண்டிருந்தான் அச்சிறுவன். அப்படி தொலைந்து போகும் போது விசிலடித்து தன் நாயை கூப்பிடுவான். அதுவும் ஓடி சென்று ஆட்டை வளைத்து மீட்டு கொண்டுவரும்.

எப்போதும் கருப்பு ஆட்டுக்குட்டி மட்டும் அந்த கூட்டத்திலிருந்து விலகி சென்று கொண்டேயிருந்தது.



வெயிற்காலம் ஏறி கொண்டே போக அச்சிறுவன் ஆடுகளை மலை மேலே ஏத்தி கொண்டே சென்றான். அந்த கருப்பு ஆட்டு குட்டி வாலை போல மந்தையின் கடைசியாக சென்று கொண்டிருந்தது.




நடந்து நடந்து மலையின் உச்சிக்கே வந்து சேர்ந்தனர் அச்சிறுவனும் ஆட்டு மந்தையும். அது ஒரு பள்ளத்தாக்கு போல் இருந்தது.

இந்த பள்ளத்தாக்கில் புற்கள் மிகவும் மென்மையாக இருந்தது. ஆடுகள் அதை மிகவும் ருசித்து தின்று கொண்டிருந்தன. இதனால் மே..மே.. என்று தன் குட்டிகளை நோக்கி கத்துவதை கூட மறந்து விட்டன.

அச்சிறுவனும் மூங்கிலை வெட்டி புல்லாங்குழல் செய்து கொண்டிருந்ததில் மூழ்கி இருந்தான்.

நாயும் வெயிலில் சுகமாக உறங்கிக் கொண்டிருந்தது.



கருப்பு ஆட்டுக்குட்டி மந்தையை விட்டு வெளியே செல்வதை யாரும் கவனிக்கவில்லை.

அது மலையின் மறுபக்கம் சென்று மறையும் வரை யாருமே அதை கவனிக்கவில்லை.




கருப்பு ஆட்டுக்குட்டியின் அம்மா மே..மே.. என்று கத்தி அழைத்த போது அதை சுத்தி முத்தி எங்கேயும் காணவில்லை.

அச்சிறுவன் குட்டியை தேடி இங்கும் அங்கும் அலைந்தான். அது எங்கும் காணவில்லை.

வேட்டை நாயும் ஆட்டை தேடி எல்லா இடத்திலும் மோப்பம் பிடித்தது. அது எங்கும் கிடைக்கவில்லை.

இப்படி கருப்பு ஆட்டுக்குட்டி வழி மாறி தொலைந்து போனது. குட்டியை பொறுத்த மட்டில் அச்சிறுவனும், மற்ற ஆடுகளும் தான் தொலைந்து போயின.



அம்மா ஆடு அங்கும் இங்கும் ஓடி

மே..மே.. என்று கத்தி கொண்டே ஓடி கொண்டிருந்தது.

அது போடும் சத்தத்தில் பயந்து போய் மற்ற ஆடுகளும்

மே..மே..மே என்று நடுக்கத்துடன் கத்தின.

மே..மே..மே..மே..




கருப்பு ஆட்டிடமிருந்து ஒரு சத்தமும் இல்லை. அச்சிறுவனும் கத்தி கொண்டே திரிந்தான், அவன் புல்லாங்குழலில் விசில் அடித்து கொண்டே சென்றான்.

அவனுடைய நாயும் மோப்பம் பிடித்துக் கொண்டு ஓடியது. ஆனால் கருப்பு ஆடு எங்கும் தென்படவில்லை. அது வருவதாகவும் தெரியவில்லை.




கருப்பு ஆடு புல்லை தின்று கொண்டு
சுகமாக மேய்ந்து கொண்டிருந்தது.






சூரியனும் மறைய தொடங்கியது.
அச்சிறுவனும் காத்திருந்து
பார்த்துவிட்டு மற்ற ஆடுகளை
மலையடிவாரத்திற்கு கொண்டு செல்ல
முடிவு செய்தான். அது தான் ஆடு
மேய்ப்பவனின் வேலை.

மலையடிவாரத்தில் நாய்களும் ஆடு
மேய்ப்பவர்களும் இரவில் ஆடுகளை
பத்திரமாக பார்த்து கொண்டனர்.
இங்கு அவை பாதுகாப்பாக இருந்தன.




மலையில் இருந்த காட்டு விலங்குகளிடம் இருந்து ஆடுகள் பாதுகாப்பாக இருந்தன குறிப்பாக சிங்கங்களிடமிருந்து.



மலையின் குளிரிலிருந்தும் பாதுகாப்பாக இருந்தன.


மந்தையாக இருந்ததால் ஒன்றுக்கு ஒன்று உரசி கொண்டு வெப்பத்தை தக்க வைத்து கொண்டன.

இடி, மின்னலிலிருந்தும் தப்பி பாதுகாப்பாக இருந்தன. மேக கூட்டங்கள் மலையின் உச்சியில் மோதி அவ்வப்போது கனமழை கொண்டுவரும். அதிலிருந்தும் தப்பி பாதுகாப்பாக இருந்தன.



இரவில் நட்சந்திரங்கள் வானில் மின்னின. குளிர்ந்த காற்றும் அடித்து கொண்டிருந்தது. அச்சிறுவன் தூங்க போனாலும் அவனுக்கு தூக்கமே இல்லை.

என்னுடைய ஆடு எங்கு உள்ளதோ, என்னை தேடி கொண்டிருக்கிறதோ என்று அவனுக்கு ஒரே கவலையாக இருந்தது. ஆனால் “ஆடு என்றால் வழி தவறி போக தான் செய்யும், காலை வரை காத்திரு, கிடைத்து விடும்” என்று அவனுக்குள்ளேயே பேசி மனசை தேத்தி கொண்டான்.




அப்படியும் அவனால் உறங்க முடியவில்லை. ஒரு நிழலை போல அவனும், அவனது நாயும் மலையை நோக்கி ஆட்டை தேடி சென்றனர். அவர்களுக்கு துணையாய் நட்சத்திரங்களின் வெளிச்சம் இருந்தது.

மலையில் ஏறும் போது ஏதோ ஒரு சலசலப்பு அவர்களை சுற்றி இருந்து கொண்டே இருந்தது. முயல் சத்தம் போலவும், ஏதோ கற்கள் தண்ணீரில் விழுவது போலவும், விலங்குகளின் சத்தமில்லாத கூச்சலுமாக இருந்தது.

மேலே செல்ல செல்ல சிங்கத்தின் கர்ஜனையும் கேட்டது.

அச்சிறுவனுக்கு அவனை பற்றி கூட கவலையில்லை, அவன் மனதெல்லாம் அந்த கருப்பு ஆட்டுக்குட்டியின் மேலேயே இருந்தது. அவன் மெதுவாக மலையின் உச்சியையும், நட்சத்திரங்களையும் நோக்கி நடந்தான்.




மலையின் உச்சியில் இருந்த பள்ளத்தாக்கை வந்தடைந்தான் அச்சிறுவன். சிங்கம் கத்தி கொண்டே விழும் சத்தமும், ஆட்டின் மே.. மே.. என்ற இரைச்சலும் அவனுக்கு கேட்டது.

அவனது நாயும் அந்த சத்தத்தை கேட்டு விட்டது. ஏதோ கற்கள் வழுக்கி சிங்கம் தட்டு தடுமாறி ஏறி இருட்டில் ஓடுவதை இருவரும் கண்டார்கள்.

மெதுவாக ஆட்டுக்குட்டியின் மே.. மே.. என்ற சத்தம் இருவருக்கும் கேட்டது. பார்த்தால் ஆடு மலையின் இடுக்கிலிருந்து கத்தி கொண்டே அச்சிறுவனை நோக்கி ஓடி வந்தது.

கருப்பு குட்டி ஆடு திரும்பக் கிடைத்துவிட்டது.



அச்சிறுவன் மகிழிச்சியுடன் ஆட்டுக்
குட்டியை தூக்கி கொண்டே
மலையடிவாரத்திற்கு தன்
மந்தையிருக்குமிடத்திற்கு வந்து
சேர்ந்தான். அவன் பாட்டும்
பாடினான்.

மெல்ல சுகமாய் தீண்டு ஓ தென்றலே!
காட்டு விலங்குகளிலிருந்து தூரமாய்
என் குட்டி ஆட்டின் மேல் மிருதுவாகும்
மெல்ல சுகமாய் தீண்டு.

மெல்ல சுகமாய் தீண்டு ஓ தென்றலே!
புல்வெளியின் மீதும்
பூக்களின் மீதும்
மெல்ல சுகமாய் தீண்டு.

மெல்ல சுகமாய் தீண்டு ஓ தென்றலே!
நீல வானத்தின் மீதும்
வெள்ளை பனியின் மீதும்
என் கருப்பு குட்டி ஆட்டின் மீதும்
மெல்ல சுகமாய் தீண்டு.

